# வடமொழி கற்கலாமே

## கிருத்திகா முரளி மணிகண்டன்

ஜப்பானுக்கு நான் வந்து சுமார் 18 வருஷம் ஆகிறது. இதுல, முதல் 7 வருஷம் டோக்கியோல இருந்தேன். அப்ப வெளிநாட்டுல இருக்கிற நினைப்பே இல்லை. இந்தியால இருக்கிற மாதிரி இருந்தது. எப்பவுமே நம்ம மக்களோட இருந்து பண்டிகை எல்லாம் சந்தோஷமாக கொண்டாடினேன்.

அதன்பிறகு, 11 வருஷமா வகாயாமால இருக்கேன். இங்க இருக்கும்போது தான், இந்த நாட்டு மக்களுடன் பழக வாய்ப்பு கிடைத்தது. அப்ப இந்தநாட்டு மக்கள் தங்கள் மொழிக்கு கொடுக்கும் முக்கியத்துவம், தன் மொழி மீது இருக்கும் பற்று, அதன் தொன்மம் எல்லாம் புரிந்தது.

அப்ப எனக்குள்ளே ஒரு தேடல் ஆரம்பித்தது. அப்ப நம்ம நாட்டுக்கு என்னன்னலாம் இருக்கும்னு. இதே சமயம் தான் இணையதள வளர்ச்சியும் வளர தொடங்கியது. இதைப்பற்றி சிறிது அறிய வாய்ப்பு அமைந்தது. அப்ப நம்ம நாட்டுப் பிரதமரும் கூட அடிக்கடி தமிழைப்பற்றியும் அதன் புராதனம் பற்றியும் அது உலகின் பழமையான மொழி பற்றியும் நிறைய கூறிவந்தார்.

நம்ம பாரத நாட்டில் உள்ள எல்லா மொழிகளுக்கும் தொன்மம் இருக்கும் அல்லவா? எங்கோ யாரோ சொல்லக் கேட்டிருக்கிறேன். நம் பாரத அன்னைக்கு ஸம்ஸ்கிருதமும் தமிழும் இரு கண்களாக விளங்குகிறதுன்னு. இவை நம் பாரத நாட்டின் பௌக்கிஷம். சிறு வயதில் தமிழுன் தொன்மத்தை அதன் சுவையை சிறிது சுவைத்திருக்கிறேன். நான் கற்றதோ சிறிதிலும் சிறிது தான், ஆனாலும் அது நம்மை சிறுவயதில் நெறிப்படுத்துகிறது!

ஔவையாரின் நீதி நூல்கள், இரண்டடியில் எல்லாவற்றையும் உள்ளடக்கும் திருக்குறள், பாரதியாரின் எழுச்சிமிக்க பாடல்கள்!! ஆகா சொல்லிக்கொண்டே போகலாம். எத்தனை வயதானாலும் மனதில் ஒலித்துக்கொண்டே இருக்கிறது.

சிறு வயது முதலே சம்ஸ்கிருதம் கற்க ஒரு ஆசை. சந்தர்ப்பம் சரியாக அப்போ அமையவில்லை. இந்த இணையதள வளர்ச்சியில் இது நிறைவேறியது. அதுவும், கோவிட் சமயத்தில், இணையதளம் மூலமாக தேவ பாஷையான சம்ஸ்கிருதத்தை கற்க ஒரு வாய்ப்பு அமைந்தது.

ஸம்ஸ்கிருதம்ன்னா என்ன? ஸம்+கிருதம் - நன்றாக செய்யப்பட்டது. எப்படி நம் தாய் மொழியான தமிழில் உயிர் உள்ளதோ, அப்படி இதிலிலும் உயிர், ஆன்மா உள்ளது. இதை தேவ பாஷைன்னு ஒதுக்கி விட்டுட்டோம் பல காரணங்களினால். ஆங்கிலேய படையெடுப்பு இதை செவ்வன நடத்தியது.

பொதுவா, நம் பாரத நாட்டில் உள்ள மொழிகளில் உள்ள ஒவ்வொரு எழுத்திற்கும் ஒரு பொருள் உண்டு. இதைத்தான் தொல்காப்பியர், "எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே", என்கிறார். அதுவும் நம் கலாசாரத்தை ஒட்டியே இருக்கும். நாம் அன்றாடம் வாழும் வாழ்க்கையில் இது ஒன்றி உள்ளது. இது தான் இதனுடைய சிறப்பு, அழகு!
முன்காலத்தில் இது ஏட்டில் மட்டுமில்லாமல் மக்கள் அன்றாடம் உபயோகிக்கும் மொழியாக இருந்தது. இன்றைக்கு இது கர்னாடகா சிமோகா பக்கத்தில் இருக்கும் இரண்டு ஊர்களில் மட்டுமே அலுவல் மொழியாக இருக்கு.



கிருத்திகா முரளி மணிகண்டன் வகயாமாவில் கடந்த பத்து ஆண்டுகளாக வாழ்கிறார். தமிழ் மீதும் இந்திய ஞான மரபின் மீதும் பற்றுக்கொண்டவர்.

இந்த ஸம்ஸ்கிருத மொழி, பாணினியின் இலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டது. இதன் எழுத்துக்களின் உச்சாரணம் நம் உடலின் எந்த பாகத்தில் இருந்து வர வேண்டும் என்பது கூட தெளிவாக குறிப்பிட்டிருக்கிறது. வேதங்கள், உபநிஷதங்கள், பிரம்ம சூத்திரம், பகவத்கீதை, இராமாயணம், மகாபாரதம், 18 புராணங்கள், பஞ்சமகாகாவியங்கள், சிற்றிலக்கியங்கள், நாடகம், கணிதம், வானவியல், ஜோதிடம், மருத்துவம், அரசியல்,,, இன்னும் ஏராளமானவை அடங்கும்.

நாம் இந்த உலகத்தில் நிறைவுடன் வாழ்வதற்கும் இவ்வுலகில் உள்ளவைகளை ரசித்து வாழ்வதற்கும் இவைகளெல்லாம் வழிக்காட்டுகிறது. நாம் படிக்கும் பல ஸ்லோகங்களுக்கு அர்த்தம் புரிகிறது. அப்பப்பா! அப்ப நாம சின்ன வயசுக்கே போயிடலாம். மனதிற்கு என்ன ஒரு நிறைவு! காளிதாசர் போன்றோரின் காவியங்களை அவர் இயற்றிய மொழியிலேயே படிக்கும் போது அதன் பொருள் எளிதில் விளங்கும் போது, என்ன ஒரு இன்பம்! ஆகா!! இதை ரசிக்க இந்த ஒரு ஜன்மம் போதுமா?

இப்பேர்ப்பட்ட இந்த மொழியை பேணிக்காப்பது நம் கடமை. இது வெறும் மொழிக்காக மட்டுமில்லை, இது நம் கலாச்சாரத்தோடு இணைந்தது. இதை நாம் செவ்வனே கற்று நம் அடுத்த தலைமுறைக்கு கடத்துவது நம் கடமை! இரு கண்களாக இருக்கும் தமிழ் நமது தாய் மொழியாக இருப்பது நமது பாக்யம், அதை நாம் இயல்பாக கற்க இயலும். மற்றொரு கண்ணாக விளங்கும் ஸம்ஸ்கிருதத்தை கற்று பாரத அன்னைக்கு ஒளி சேர்ப்போம்!!

‘தன்னை அறிய தனக்கொரு கேடில்லை ‘என்ற திருமூலர் வாக்கு போல் நாம் நம் மூலத்தை கண்டறிவது இன்றியமையாதது. இது நம் தலைமுறையினர் இன்புற்று வாழவழிவகுக்கும்!!

பிழைப்புக்காக அயல் நாட்டு மொழியை கத்துக்கறோம். நம்மள அறிஞ்சுக்க நம் பாரத மொழிய கத்துக்கலாமே.


